DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 46/2022**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜாத்தி | Husband Name – | ஜெயபிரகாஷ் |
| Age | 61 | Village – | டி.ஓவுலாபுரம் |
| | | Taluk – | உத்தமபாளையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.04.2026.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. தாவா சொத்து பூர்வீகமாக 100 வருடங்களுக்குமேலாக பட்டா எண்.2082 சர்வே எண்.270/4 ஏக்கர் 1 செண்ட் 81 உள்ள நிலம் பரம்பரை சொத்தாக முன்னோர்களிடம் இருந்து பங்காளிகளான அழகர் சாமிநாயுடு, கோச்சடைமுத்தையா மற்றும் நாகையசாமிநாயுடு ஆகிய மூவருக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி நாகையசாமிநாயுடுவின் மகன் பெயர் அய்யலு நாயுடு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அய்யலுநாயுடுவிற்கு நான்கு மகன்கள் உள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அய்யலுநாயுடுவின் நான்காவது மகன் தான் பிரதிவாதி லார்டு பிரபாசன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாகையாசாமி நாயுடு இறந்தபின்பு அவரது மகன் அய்யலுநாயுடுவும், பேரன்கள் நான்குபேரும் சேர்ந்து 05.09.1989 ம் தேதி தேவாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பாகப்பிரிவினை பத்திரம் எழுதி பதிவு செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.270/4 ல் மூன்றில் ஒரு பாகம் 56 செண்ட் நிலம் அய்யலுநாயுடு பாகத்திற்கு ஏ செடியூலில் 9 வது லக்கமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்பின்புதான் அய்யலுநாயுடுவின் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி அய்யலுநாயுடுவின் குடும்பத்தினர் தான் வழக்குரை சொத்தை இன்றுவரை அனுபவித்து வருகின்றனர் என்றால் சரியல்ல, நான் தான் அனுபவித்து வருகிறேன். வழக்குரை சொத்து தற்போது பிரதிவாதி அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. வழக்குரை சொத்து சர்க்கார் புறம்போக்கு நிலம் என்று சொல்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, வழக்குரை சொத்து 70 வருடங்களாக எனது மாமனார் அனுபவத்திலும் அதன்பின்பு எனது கணவர் அனுபவத்திலும் இருந்து

வருகிறது. கூட்டுப்பட்டாவில் என்னுடைய மாமியார் பெருமாயி பெயர் தான் இடம்பெற்றுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் எதன் அடிப்படையில் எனது மாமியாரின் பெயர் சேர்க்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, எனது மாமனாரும் மாமியாரும் சேர்ந்து தான் வழக்குரை சொத்தை அனுபவித்து வந்தார்கள். வழக்குரை சொத்து சர்வே எண்.270/4 ல் அழகர்சாமி நாயுடுவிற்கு பாத்தியப்பட்ட நிலத்தை தான் எனது மாமியாரும் மாமனாரும் ஆக்கிரமிப்பு செய்து மோசடியாக பட்டா பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.270/4 ல் வடக்கு பக்கம் உள்ள 56 செண்ட் நிலத்தை தான் எனது மாமனாரும் மாமியாரும் ஆக்கிரமிப்பு செய்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல, வழக்குரை சொத்தை தான் அனுபவித்து வந்தார்கள். மேற்படி வடக்கு பக்கம் உள்ள 56 செண்ட நிலத்தை ஒரு காற்றாலை நிறுவனத்திற்கு 23.09.2011 ம் தேதி எனது மாமியாரின் வாரிசுகள் கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் அந்த நிலம் வேறு வழக்குரை சொத்து வேறு. மேற்படி கிரைய பத்திரத்தில் வடக்கு பக்கம் 56 செண்ட் என்பதற்கு பதிலாக தென்புறம் 56 செண்ட் என்றும், எல்லை விபரத்தில் தெற்கே சர்வே எண்.270/4, 270/5B என்பதற்கு பதிலாக தெற்கே கண்மாய்கரை என்று தவறுதலாக பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் உள்ள தவறுகளை பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினர் சுட்டிக்காட்டிய பின்பும் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் தேவாரம் காவல்நிலையத்தில் பிரதிவாதி குடும்பத்தினர் எங்கள் மீது புகார் அளித்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி புகார் அளித்த பின்பு பிழைத்திருத்தல் ஆவணமாக ஆவண எண்.405/2012 ஆவணத்தை சீர்திருத்தி பதிவு செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காற்றாலை நிறுவனத்திற்கு கிரைய செய்து கொடுத்தவுடன் எனது மாமியார் பெருமாயிக்கும் சர்வே எண்.270/4 க்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது மாமியாரிடமிருந்து சர்வே எண்.270/4B க்கு கட்டுப்பட்ட நிலத்தை கிரையம் வாங்கிய காற்றாலை நிறுவனம் அந்த நிலத்தை வேறொரு காற்றாலை நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண்.270/4 க்கு கட்டுப்பட்ட கோச்சடைமுத்தையா பாகமும் நாகையசாமி பாகமும் சர்வே எண்.270/4A என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விற்பனை செய்யப்பட்ட பின்பும் என்னுடைய மாமியார் பெயர் இன்று வரை சர்வே எண்.270/4A க்கான கூட்டுப்பட்டாவில் உள்ளது என்றால் தற்போது வரை எனது மாமியார் பெயர் பட்டாவில்

உள்ளது. சர்வே எண்.270/4A க்கு கட்டுப்பட்ட கோச்சடைமுத்தையாவின் 56 செண்ட் நிலத்தில் 38 செண்ட்டை மட்டும் விற்பதற்கு 1ம் வாதியான எனது கணவர் ஜெயப்பிரகாஷ் என்பவரை பொது அதிகார முகவராக 30.04.2008ம் தேதி கோச்சடைமுத்தையா நியமித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவரை பொது அதிகார முகவராக மட்டும் தான் நியமித்தார் என்றும், வழக்குரை சொத்தில் எந்த உரிமையும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனது கணவரை பொது அதிகார முகவராக நியமித்துவிட்டு கோச்சடைமுத்தையா 03.05.2008ம் தேதி காலமாகிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கோச்சடைமுத்தையா இறந்தவிபரம் தெரிந்துகொண்டே எனது கணவர் 26.05.2008ம் தேதி எனது பெயருக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் கோச்சடைமுத்தையா இறந்தது எனக்கு தெரியாது, அவர் எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தை பற்றியும் எனக்கு தெரியாது, எனது கணவர் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தை நாங்கள் ரத்து செய்து விட்டோம், அதை கோச்சடைமுத்தையாவின் மகன் பெயருக்கு திரும்ப எழுதிக்கொடுத்துவிட்டோம். எனது கணவர் பெயர் பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் கூட்டுப்பட்டாவில் தவறுதலாக சேர்க்கப்பட்டு தற்போது வரை நீக்கட்டாமல் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கோச்சடைமுத்தையாவின் மகன் செந்தில்குமார் என்பவர் எனது மருமகள் பிரசன்னாதேவிக்கு 24.11.2016ம் தேதி 38 செண்ட் நிலத்தை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். எனது மருமகள் பிரசன்னா தேவி மேற்படி 38 செண்ட் நிலத்தை உமாமகேஸ்வரி என்பவருக்கு 15.12.2020ம் தேதி கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மருமகள் பிரசன்னாதேவி கிரையம் வாங்கியபோது கூட்டுப்பட்டாவில் பெயர் சேர்க்கப்பட்டது என்றும், அது தற்போது வரை நீக்கப்படாமல் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உமாமகேஸ்வரி அவர் கிரையம் பெற்ற நிலத்தை தனிப்பட்டா வாங்கி அவர் வாங்கிய நிலம் சர்வே எண்.270/4A1ஆக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.270/4A ல் மீதமுள்ள கோச்சடைமுத்தையாவிற்கு சொந்தமான 18 செண்ட் நிலமும் பிரதிவாதி குடும்பத்தினருக்கு சொந்தமான 56 செண்ட் நிலமும் சேர்த்து சர்வே எண்.270/4A2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மாமியார் பெருமாயி பெயரும், எனது கணவர் ஜெயப்பிரகாஷ் பெயரும் மருமகள் பிரசன்னா தேவி பெயரும்

கூட்டுப்பட்டாவில் இருப்பதை பயன்படுத்தி சர்வே எண்.270/4A2 ல் நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. வழக்குரை சொத்து எனது மாமியார் பெருமாயிக்கும் மருமகள் பிரசன்னாதேவிக்கும் பாத்தியப்பட்டதாக நான் சொல்லும் நிலையில் எனது மாமியார் பெருமாயியின் வாரிசுகளையும் எனது மருமகள் பிரசன்னாதேவியையும் ஏன் இந்த வழக்கில் கட்சிக்காரராக சேர்க்கவில்லை என்றால் பிரசன்னாதேவியின் நிலத்திற்கும் வழக்குரை சொத்திற்கும் சம்மந்தமில்லை, பெருமாயி வழக்குரை சொத்தை எனது கணவர் பாகத்திற்கு ஒப்படைத்துவிட்டார். வழக்கரை சொத்து எனது கணவருக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்ய இந்த வழக்கில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்ய எங்களுக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்குரையில் பிரதிவாதி மீது நான் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.04.08 16:43:22 +0530

District Munsif,
Bodinayakanur.